21.04.2026

OS No: 132/2018

வா.சா. 2 திரு. காளிதாசன் த/பெ தியாகராஜன்

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

வாசா ஆ 1 ஆவணமானது எந்த தேதி எந்த வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் வருடம் தெரியும் தேதி தெரியாது. மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து செய்த போது வேறு யார் யார் அதில் சாட்சி கையெழுத்து செய்திருந்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் நியாபகம் இல்லை. நான் சாட்சி கையெழுத்து செய்திட்ட ஆவணம் போர்ஜரி என நிபுணர் அறிக்கை கொடுத்துள்ளார் என சங்கதியை வாதி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. வாதியால் வாசா ஆ 1 ஆவணம் போர்ஜரியாக தயார் செய்யப்பட்ட நிலையில் வாதிக்கு ஆதரவாக நானும் அதில் சாட்சி கையெழுத்து செய்து போர்ஜரி குற்றம் புரிந்துள்ளேன் என்றால் சரியல்ல. பொய்யாக ஒரு போர்ஜரி ஆவணம் தயார் செய்யப்பட்டு அதில் நான் சாட்சி கையெழுத்து செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.21 17:38:52 +0530